வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07 | 09.07.2026 வியாழக்கிழமை | இதழ் : 184 | பக்கங்கள் : 08

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


## போரினால் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்துக!

### ஜனாதிபதி அநுரகுமார பணிப்புரை



கொழும்பு, ஜூலை. 09

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் வேலைத் திட்டத்தை விரைவுபடுத்துமாறும், குறைந்த வருமானமுடைய மக்களால் கட்டப்பட்ட வீடுகளுக்கு, வீட்டு வசதி உதவி வழங்கும் வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் 2026 ஆம் ஆண்டுக்கான திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் 2027 ஆம் ஆண்டுக்கான நிதித் தேவைகள் குறித்து நேற்று முற்பகல், ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, வீடமைப்பு, நிர்மாணப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் மீள்குடியேற்றப் பிரிவு உள்ளிட்ட அமைச்சின் விடயப்பரப்புக்குட்பட்ட அனைத்து திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால், 2026 வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப் பட்ட திட்டங்களின் முன்னேற்றம் மற்றும்

07

## நீர்கொழும்பு சிறையில் மீண்டும் பதற்ற நிலை!

கொழும்பு, ஜூலை. 09

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து நேற்று மீண்டும் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

நேற்று சிறிய அளவிலான மோதல் நிலை ஏற்பட்டதுடன், கைதிகள் சிறை அறைகளை விட்டு வெளியே வந்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், நீர்கொழும்பு பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிமல்

07

## பாதாளக் குழுக்களோடு எப்போதும் ராஜபக்ஷக்களுக்கு தொடர்பு உண்டு!

### பிரதி அமைச்சர் சுனில் வட்டகல சாடல்



கொழும்பு, ஜூலை. 09

"சிறைச்சாலைகளில் போதுமான வசதிகள் இல்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது சொந்த எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு புலம்புவது நியாயமானதே" என்று

07

## இலங்கை சிறைச்சாலை அமைப்பில் விரிவான சீர்திருத்தங்கள் அவசியம்!

### ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்து



கொழும்பு, ஜூலை. 09

இலங்கையின் சிறைச்சாலை அமைப்பில் விரிவான சீர்திருத்தங்கள் அவசியமானவை என இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் - அண்ட்ரே பிரெஞ்ச் வலியுறுத்தியுள்ளார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பாக, இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை

07

## பலாலிக் காணிகள் விடுவிப்பு வாக்குறுதிக்கு என்ன நடந்தது?

### சபையில் சாணக்கியன் கேள்வி

கொழும்பு, ஜூலை. 09

நாட்டில் ஆயுத மோதல் முடிவுக்கு வந்து பதினேழு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள கணிசமான அளவிலான பொதுமக்களுக்குச் சொந்தமான தனியார் நிலங்கள் இன்னும் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளன. தேசிய மக்கள் சக்தி வடக்கில் பலாலியில் காணி விடுவிப்பை தேர்தல் விஞ்ஞாபனமாக கூறி வெற்றி பெற்றது. ஆனால் அங்கு இன்றளவிலும் பல

07

## வடக்கு-கிழக்கில் தொல்லியல் திணைக்களம் தமிழ் மக்களின் காணிகளை பறிக்கவில்லை!

### சபையில் குறிப்பிட்டார் அமைச்சர் சந்தன அபேரத்ன



கொழும்பு, ஜூலை. 09

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை தொல்லியல் திணைக்களம் பலவந்தமாகக் கையகப்படுத்தவில்லை அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் சந்தன அபேரத்ன இதனைத் தெரிவித்தார்.

அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்குச்

07

## செம்மணி புதைகுழி உண்மைகளை மறைக்கச் சொன்னாரா சந்திரிகா?

### விசாரிக்குமாறு ரவிகரன் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, ஜூலை. 09

செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் உண்மைகளை வெளிப்படுத்தக்கூடாதென முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, சோமரத்ன ராஜபக்ஷவிடம் கேட்டுக்கொண்டதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியுள்ள சூழலில், அவரிடம் விசாரணைகளை முன்னெடுக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

07

## எதிரணிகளை ஒன்றிணைக்க நாமல், ரோஹித புதிய வியூகம்

கொழும்பு, ஜூலை. 09

பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள எதிர்க்கட்சிகளின் குரல்களை ஒன்றிணைக்கும் நோக்கில், "ஏ ரீம் - நெக்ஸ்ட் வேவ்" என்ற பெயரிலான புதிய அரசியல் தளம் ஒன்றை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆரம்பித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்தன, அனுராத ஜயரத்ன, டி. வி. சானக மற்றும் சானக மதுகொட ஆகியோர் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துள்ளனர்.

03

## சபையில் கஜேந்திரகுமாரின் ஆசனம் இடமாற்றப்பட்டது!

கொழும்பு, ஜூலை. 09

பாராளுமன்ற ஆசன வரிசையில் தனது ஆசனத்தை மாற்றுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுத்த கோரிக்கையை அடுத்து அவரது ஆசனம் இடமாற்றப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்க்கட்சிப் பக்கத்தில் நான்காவது நிரையில் முதல் வரிசையில் மூன்றாவது இடத்தில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் ஆசனம் அந்த வரிசையில் முதலாவது

07

## ரணில் மீதான விசாரணை செப்ரெம்பர் 30ஆம் திகதி!

கொழும்பு, ஜூலை. 09

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக்காலத்தில் மேற்கொண்ட லண்டன் பயணத்தின் போது அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியதாகக் கூறப்படும் வழக்கு நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சம்பவம் தொடர்பான அனைத்து விசாரணைகளும் நிறைவடைந்துள்ளதாகவும், விசாரணைக் கோப்புகள் சட்ட மாஅதிபரின்

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நீர்கொழும்பு சிறை கலவரத்துக்கு எதிர்ப்பு;

# கறுப்புப்பட்டி அணிந்து சபை அமர்வில் பங்கேற்றனர் எதிர்க்கட்சி எம்.பிக்கள்!

கொழும்பு, ஜூலை. 09

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், நாடாளுமன்ற அமர்வுகள் இன்று ஆரம்பமானபோது, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கறுப் புப்பட்டி அணிந்து தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் 27 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என வலியுறுத்தியே இந்த எதிர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதுடன், சம்பவம் தொடர்பில் சுயாதீன மற்றும் வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்தனர். (அ)

## நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்து பூஸாவுக்கு மாற்றப்பட்ட கைதி மரணம்!

கொழும்பு, ஜூலை. 09

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையைத் தொடர்ந்து பூஸா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திடீர் உடல்நலக்குறைவு காரணமாக அவர் காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் ஏ.சி.கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலதிக மருத்துவ மற்றும் விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## இணையவழி மோசடிகள் குறித்து மத்திய வங்கி அவசர எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 09

அவசரம் இருப்பது போன்ற ஒரு போலி உணர்வை ஏற்படுத்தி, பொதுமக்களை ஏமாற்றி அவர்களின் தனிப்பட்ட மற்றும் நிதித் தகவல்களைப் பெற முயலும் இணையவழி மோசடிகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு இலங்கை மத்திய வங்கி அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய வங்கியின் "மோசடிக்கு ஆளாகாதீர்கள்" என்ற விழிப்புணர்வுப் பிரசாரத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்படடுள்ளது.

ஒரு மணி நேரத்தில் உங்கள் கணக்கு முடக்கப்படும்" என்பது போன்ற பீதியூட்டும் செய்திகளை அனுப்பி, மோசடிக்காரர்கள் மக்களைச் சிந்திப்பதற்கு அவகாசம் தராமல் அவசர அவசரமாகச் செயல்படத் தூண்டுகிறார்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிதி மோசடிகளைப் பொறுத்தவரை, "அவசரம்" என்பது மிக முக்கியமான ஒரு எச்சரிக்கை அறிகுறியாகும்.

மோசடிக்காரர்கள் பொதுமக்களின் பயத்தையும் பதற்றத்தையும் சாதகமாகப் பயன்படுத்தி, அவர்களை அவசரப்பட்டு தவறான முடிவுகளை எடுக்க வைக்கிறார்கள் என்று மத்திய வங்கி வலியுறுத்தியுள்ளது.

எனவே, வங்கிக் கணக்குகள், பணப் பரிவர்த்தனைகள் அல்லது தனிப்பட்ட தகவல்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கூறி வரும் எதிர்பாராத செய்திகள் மற்றும் அழைப்புகள் குறித்து பொதுமக்கள் நிதானமாகச் சிந்தித்து, அவற்றைச் சரிபார்க்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## நீர்கொழும்பு சிறைச்சாலை வன்முறை;

# உயிரிழந்த அதிகாரிகளின் உடல்கள் பேரணியாக வெலிக்கடை சிறைக்கு!

கொழும்பு, ஜூலை. 09

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதலில் உயிரிழந்த சிறைச்சாலை அதிகாரிகளின் உடல்கள் நேற்றுக் காலை வாகனப் பேரணி மூலம் வெலிக்கடை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டன.

வன்முறைச் சம்பவத்தில் உயிரிழந்த ஏழு சிறைச்சாலை அதிகாரிகளின் உடல்களுக்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார இறுதி அஞ்சலி செலுத்தியிருந்தார்.

இதன்போது உயிர்நீத்த அதிகாரிகளின் குடும்பங்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்த அமைச்சர், அவர்களின் தியாகம் என்றும் நினைவு கூரப்படும் எனக் குறிப்பிட்டார்.

உயிரிழந்த சிறைச்சாலை அதிகாரிகளின் உடல்களுக்கு சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் சக ஊழியர்கள் உட்பட ஏராளமானவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

கடந்த 6ஆம் திகதி காலை நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் வெடித்த வன்முறை மோதலின்போது ஏழு சிறைச்சாலை அதிகாரிகள் உயிரிழந்ததுடன், இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# சுவிற்சர்லாந்து தூதுவருடன் ரெலோ கட்சியினர் சந்திப்பு



கொழும்பு, ஜூலை. 09

தனது பதவிக் காலத்தை நிறைவு செய்து கொள்ளும் சுவிற்சர்லாந்தின் இலங்கைக்கான தூதுவர் சிரி வால்ட் அம்மையாரை சுவிற்சலாந்து தூதரகத்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பிரதிநிதிகள் மரியாதை நிமித்தம் நேற்று முன்தினம் சந்தித்தனர்.

இச் சந்திப்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பிரதித் தலைவரும் பேச்சாளரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வடமாகாண தேசிய அமைப்பாளருமான குருசுவாமி சுரேந்திரன் மற்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வவுனியா மாவட்ட இணைப்பாளருமான செந்தில்நாதன் மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தூதுவரின் பதவிக் காலத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைப்பதற்கான தொடர் முயற்சிகளை மேற்கொண்டமைக்கு நன்றி கூறப்பட்டது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளை சுவிற்சர்லாந்துக்கு அழைத்தும், தூதரகத்துக்கு அழைத்தும், பாராளுமன்றத்திலும் மற்றும் அவர் மேற்கொண்ட வடக்கு-கிழக்கு விஜயங்களின்போதும் ஒற்றுமைப்படுத்துவதற்கான காத்திரமான முயற்சிகளை அம்மையார் மேற்கொண்டு இருந்தார். இருப்பினும் துரதிஷ்டவசமாக அந்த ஒற்றுமை முயற்சி நிறைவேறாவிட்டாலும் கூட எதிர்காலங்களிலும் சுவிற்சர்லாந்து தூதரகம் அந்த முயற்சியை தொடரவேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்ததோடு அதற்கு தாம் பரிபூரண ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகவும் கட்சிப் பிரதிநிதிகள் தரப்பால் எடுத்துக் கூறப்பட்டது.

அம்மையாருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் இச் சந்திப்பு நிறைவு பெற்றது. (அ)

# வறுமையை ஒழிக்க மானியம் மட்டும் போதாது உற்பத்திப் பொருளாதாரத்தில் ஊக்குவியுங்கள்!

## ஜனாதிபதி அனுரகுமார வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை. 09

வறுமையை ஒழிப்பதற்காக மானியங்களை மட்டும் நம்பியிருக்காமல், குடும்ப அலகுகளை மையமாகக் கொண்ட விஞ்ஞானபூர்வமான வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தவேண்டுமென ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

கிராமிய அபிவிருத்தி மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் வரவு செலவுத் திட்ட மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது, "அஸ்வெசும" பயனாளிகளில் 2 இலட்சம் குடும்பங்களை இந்த ஆண்டுக்குள் உற்பத்திப் பொருளாதாரத்தில் இணைப்பதன் முக்கியத்துவம் குறித்து ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேலும், பின்வரும் விடயங்கள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டன:

உழைக்க முடியாத முதியோர் மற்றும் விசேட தேவையுடையோரை அரசாங்கம் முழுமையாகப் பராமரித்தல்.

உழைக்கும் திறன் கொண்டவர்களை உற்பத்தித் துறைகளில் ஈடுபடுத்துதல்.

அமைச்சுகள் தனித்தனியாகச் செயல்படாமல், குடும்பங்களின் தேவையை அறிந்து "குடும்ப அபிவிருத்தித் திட்டம்" மூலம் உதவிகளை வழங்குதல்.

தொழில்புரியும் தாய்மார்களுக்காக நாடு முழுவதும் 50 பகல்நேர பராமரிப்பு நிலையங்களை அமைத்தல்.

பொலிஸ் நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற பொது இடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரவேச வசதிகளை மேம்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

நிவாரணங்களை வழங்குவதைத் தாண்டி, ஒவ்வொரு குடும்பத்தையும் பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதே அரசாங்கத்தின் இலக்கு என ஜனாதிபதி இதன்போது மேலும் தெரிவித்தார். (அ)

# டித்வா புயல் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 1,230 கோடி இழப்பீடு!

கொழும்பு, ஜூலை. 09

கடந்த ஆண்டு ஏற்பட்ட 'டித்வா' புயலால் பாதிக்கப்பட்ட 2,02,025 விவசாயிகளுக்கு 12,341.5 மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

சபையின் தகவலின்படி, முழுமையாகப் பாதிக்கப்பட்ட 148,000 ஏக்கர் நெல் வயல்களுக்காக, 116,278 விவசாயிகளுக்கு கமநலக அபிவிருத்தித் திணைக்களம் ஏற்கனவே 8,888.5 மில்லியன் ரூபாயை வழங்கி யுள்ளது.

மேலும், மகாவலிப் பகுதிகள், மாகாணங்கள் மற்றும் மாகாணங்களுக்கிடையிலான பிராந்தியங்களில் சோளம், மரக்கறிகள் மற்றும் ஏனைய பயிர்களை அறுவடை செய்யும் 85,747 விவசாயிகளுக்கு 3,453 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

நெல் செய்கைக்கு ஹெக்ரேயருக்கு ரூ. 1,50,000 ஆகவும், மக்காச்சோளம், காய்கறிகள் மற்றும் பிற பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ. 2,00,000 ஆகவும் இழப்பீட்டுத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu 09.07.2026 வியாழக்கிழமை ඊළනාඩු
பராபவ வருடம், ஆனி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# சிறைக் கலவரத்தை தொடர்ந்து "அரசியல் கலவரம்"

நீர்கொழும்பு சிறைக் கலவரம் கடுமையான படைபலப் பிரயோகத்தின் மூலமாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சிறை அதிகாரிகள் ஏழுபேரும் இருபது கைதிகளும் மரணமடைந்தனர். நூறுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். பாதுகாப்புக் கருதி நீர்கொழும்பில் இருந்து நாட்டின் பல்வேறு சிறைகளுக்கு பெரும் எண்ணிக்கையான கைதிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

கைதிகள் மத்தியில் இருந்த போதைப் பொருள் கடத்தல் குழுவொன்றுக்கும் அவர்களது சட்டவிரோத நடவடிக்கைகளை எதிர்த்த இன்னொரு குழுவுக்கும் இடையிலான மோதலே இறுதியில் படுமோசமான கலவரத்துக்கு வழி வகுத்ததாக கூறப்படுகிறது. போதைப்பொருள் மாபியா மீண்டும் அதன் பலத்தை வெளிக்காட்டியிருக்கிறது. வழமை போன்று கலவரம் குறித்து விசாரணை செய்வதற்கு அரசாங்கம் குழுவொன்றை நியமித்திருக்கிறது.

சிறைக் கலவரம் அடங்கியதும் அது தொடர்பில் "அரசியல் கலவரம்" மூண்டிருக்கிறது. நீர்கொழும்பு சிறைக் கலவரத்துக்கு முழுமையாகப் பொறுப்பேற்பதாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார பகிரங்கமாக அறிவித்த போதிலும், அது போதாது என்று அவர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்று எதிரணி கட்சிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

நீர்கொழும்பு சிறைக் கலவரத்தை தொடர்ந்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக எதிரணி அரசியல்வாதிகள் தொடுத்துவரும் தாக்குதல்களை நோக்கும்போது ஏதோ இதுதான் இலங்கையில் மூண்ட முதலாவது சிறைக் கலவரம் என்ற தோரணையில் அவர்கள் நடந்துகொள்வது போன்று இருக்கிறது.

கடந்த சில தசாப்தங்களாக இலங்கையில் சிறைகளில் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்று வந்திருக்கின்றன. 1983 கறுப்பு ஜூலையில் வெலிக்கடைச் சிறைக்குள் இரு தனித்தனி தாக்குதல் சம்பவங்களில் ஐம்பதுக்கும் அதிகமான தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டார்கள் அதே சிறையில் 2004 ஆம் ஆண்டில் போதைப்பொருளையும் கையடக்கத் தொலைபேசிகளையும் தேடி விசேட அதிரடிப்படையினர் நடத்திய தேடுதலைத் தொடர்ந்து மூண்ட கலவரத்தில் 27 கைதிகள் கொல்லப்பட்டனர். 2020 ஆண்டில் மஹர சிறைக் கலவரத்தில் 11 கைதிகள் உயிரிழந்தனர். இவற்றைத் தவிர, வேறு சிறைகளிலும் அவ்வப்போது வன்முறைகள் மூண்டன.

தற்போது காணக் கூடியதாக இருப்பதைப் போன்று, அந்த வன்முறைகளைத் தொடர்ந்தும் "அரசியல் கலவரங்கள்" மூண்டன. கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறியதாக ஆளும் கட்சியினரை எதிர்க்கட்சியினர் கடுமையாக விமர்சனம் செய்தனர். 2020 மஹர சிறை வன்முறையைத் தொடர்ந்து அன்று எதிர்க்கட்சியில் இருந்த இன்றைய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் கைதிகளைப் பாதுகாக்கத் தவறியதாக கடுமையாக கண்டனம் செய்து பேசிய காணொளி தற்போது இணையத்தில் பரவி வருகிறது.

இன்றைய எதிரணி கட்சிகள் அன்று அரசாங்கத்தில் இருந்த போது ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) அவர்களைத் தாக்கியது. இப்போது மறுதலையாகத் தாக்குதல் நடக்கிறது. இந்த கட்சிகள் எல்லாம் அரசியல் கலவரத்தில் ஈடுபடுவதை விடுத்து ஒன்றிணைந்து சிறைகளில் நிலவும் அமைதியின்மை மற்றும் வன்முறைகளுக்கான மூலக் காரணிகளை ஒழிப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் ஒருவேளை நீர்கொழும்பு சிறைக் கலவரம் நடந்திருக்காது.

# அரசியல் - பாதாள உலகக் குழுக்களுக்கிடையிலான பிணைப்பு எவ்வளவு தூரம் நீண்டுள்ளது?

*(நேற்றைய இதழ் தொடர்ச்சி)*

முன்னதாக நாடு கடத்தப்பட்ட போதிலும், விசித்திரமான முறையில் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர், வெளிநாடுகளுக்குத் தப்பியோடிய முன்னணி பாதாள உலகத் தலைவர்களின் எண்ணிக்கையைக் கருத்திற் கொள்ளுங்கள்.

கொழும்பு தலைமை நீதவானால் 5 மில்லியன் ரூபாய் பிணையில் விடுவிக்கப்பட்ட சில நாட்களிலேயே, பிரபல போதைப்பொருள் கடத்தல்காரனான கஞ்சிப்பானி இம்ரான் நாட்டை விட்டு தப்பியோடினார். இதே போன்று ஜனித் மதுசங்க எனப்படும் பொடிலசி, 2024ஆம் ஆண்டில் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் நாட்டை விட்டு தப்பியோடினார். பின்னர் அவர் இந்திய அதிகாரிகளால் மும்பையில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்.

மோதர சத்துர மற்றும் புளுமெண்டல் சனக ஆகிய மேலும் இரு முன்னணி பாதாள உலகப் புள்ளிகளும் இதேபோல் நாட்டை விட்டு தப்பியோடி, சமீபத்தில் துபாயில் இருந்து நாடு கடத்தப்பட்டனர்.

வெளிநாடுகளில் தங்கள் தளங்களை அமைத்துள்ள இத்தகைய கொடூரமான பாதாள உலகப் புள்ளிகளுக்கு பிணை வழங்கும் போது, நீதித்துறை அதிகாரிகள் அவர்கள் நாட்டை விட்டு தப்பியோடும் அபாயத்தைக் கருத்தில் கொள்ளாமல் இருப்பது ஆச்சரியமளிக்கிறது. பாதாள உலகப் புள்ளிகள் "கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்படும்" இந்த நிகழ்வுக்கு வழிவகுத்த சட்ட அமைப்பில் உள்ள குறைபாடுகளும் சாத்தியமான கூட்டுச்சதிகளும் குறித்து அரசாங்கம் விசாரிக்க வேண்டும்.

தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் இதுவரை 58 பாதாள உலகப் புள்ளிகள் நாடு கடத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் உரிமை கோருகிறது. எவ்வாறாயினும், நீண்டகால நீதிமன்ற விசாரணைகள் நிலுவையில் உள்ள நிலையில், அவர்கள் மூன்று முதல் ஆறு மாதங்களுக்குள் விடுவிக்கப்படும் வரை, எந்தவொரு அர்த்தமுள்ள நாடு கடத்தல் திட்டமும் வீணானதே ஆகும்.

விசேட பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றங்களைப் போன்றே, இலங்கையும் பாதாள உலக நடவடிக்கைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க ஒரு தனி நீதிமன்றத்தை நிறுவ வேண்டும்.

அதேபோல், பாதாள உலகப் புள்ளிகளுக்கான பிணை நிபந்தனைகளை ரத்து செய்யும் புதிய சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். அத்தகைய சட்டம் இயற்றப்படும் வரை, பாதாள உலக உறுப்பினர்களை தண்டனைக்கு முன்னதாக நீண்ட கால காவலில் வைப்பதற்கு, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை இலங்கை பயன்படுத்தலாம்.

மெக்சிக்கோவின் போதைப்பொருள் கடத்தல் குழுக்களை வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகளாக அறிவித்த ட்ரம்ப் நிர்வாகத்தைப் போன்று, ஜனாதிபதி பாதாள உலகக் குழுக்களை தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான உயர் மட்ட அமைப்புகளாக அறிவிக்க முடியும். இத்தகைய நடவடிக்கை ஒரு மிகைப்படுத்தப்பட்ட செயலாக பார்க்கப்பட்டாலும், தீர்க்கமான முடிவுகளை எடுக்காமையும், அரைகுறை நடவடிக்கைகளும் பாதாள உலகத்தினருக்கு சாதகமாகவே அமையும்.

19ஆம் நூற்றாண்டில் ஒரு பழமைவாத பிரபு கூறியது போல, தாராளமயம் தழைத்தோங்க வேண்டுமானால், பாக்கெட் அடிப்பவர்கள் சிறையில் அடைக்கப்பட வேண்டும், கற்பழிப்பாளர்களும் கொலைகாரர்களும் தூக்கிலிடப்பட வேண்டும்.

## கட்டமைப்பின் ஒருமைப்பாடு

மற்றொரு கவலை என்னவென்றால், இத்தகைய முறைகேடுகளுக்கு இடமளிக்கும் ஒட்டுமொத்த அரசியல் மற்றும் சட்ட கட்டமைப்பின் ஒருமைப்பாடு ஆகும். இலஞ்சம் பெறப்பட்டு மூன்று வருடங்களின் பின்னரும், புதிய அரசாங்கம் அமைந்து கிட்டத்தட்ட பதினெட்டு மாதங்களின் பின்னரும் இந்த அண்மைய குற்றச்சாட்டுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை சம அளவில் கவலையளிக்கிறது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அண்மைக் காலமாக முன்னைய ஆட்சியின் முக்கிய புள்ளிகள் மற்றும் ராஜபக்ச குடும்பத்தினர் சம்பந்தப்பட்ட பல உயர் மட்ட வழக்குகளைத் தொடர்ந்து வருகிறது. அந்த விசாரணைகள் நீண்ட நாட்களுக்கு முன்பே நடத்தப்பட்டிருக்க வேண்டியவை, ஆனால் முன்னைய அரசாங்கங்களால் அவை கிடப்பில் போடப்பட்டிருந்தன. எனினும், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவும் "தேர்ந்தெடுக்கப்பட்ட நீதி"யை (selective justice) நடைமுறைப்படுத்துவதாக குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறது.

சரித் அபேசிங்கவின் கைது நடவடிக்கை, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா செய்த தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்தே இடம் பெற்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் ஒருவர் அண்மையில் தெரிவித்திருந்த கருத்தும் மற்றுமொரு உதாரணமாக அமையலாம். எதிர்க்கட்சியாக இருந்தபோது சதி கோட்பாடுகள் மற்றும் அவதூறுகளில் செழித்து வளர்ந்த ஜே.வி.பி. என்ற கட்சிக்கு நன்றாகத் தெரியும், அரசியல் ரீதியாக பயனுள்ளதாக இருக்கும் அதே வேளையில், அவை தேசத்தை சீர்குலைக்கவும் கூடும் என்று.

ஒரு நாடு சீராக இயங்குவதற்கு சிங்கப்பூரைப் போன்ற கடுமையான சட்டங்கள் தேவைப்படுகின்றன. ஒருவேளை, அதற்கு முன், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வார்த்தைகளால் மட்டுமல்லாமல் செயல்களாலும் தனது நடுநிலைமையை நிரூபிக்க வேண்டும்.

**- ரங்க ஜயசூரிய** (டெய்லி மிரர்)

## எதிரணிகளை...

பாராளுமன்றத்தில் அரசு கொண்டுள்ள பெரும்பான்மை பலம் காரணமாக, அங்கு தங்களது கருத்துக்களைச் சரியாகப் பிரதிபலிக்க முடியாத அரசியல் கட்சிகள், சுயாதீனக் குழுக்கள் மற்றும் தனிநபர்களுக்குக் குரல் கொடுப்பதே இந்தத் தளத்தின் முக்கிய நோக்கம் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது: -

பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிராத அரசியல் குழுக்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து, தேசிய பிரச்சினைகள் குறித்தும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் குரல் எழுப்ப இந்த முன்முயற்சி செயற்படும். அத்துடன், பரந்தளவிலான ஓர் அரசியல் கூட்டணியைக் கட்டியெழுப்புவதற்காகப் பல்வேறு எதிர்க்கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்களின் பிரதிநிதிகளை இந்த ஒரே மேடையில் ஒன்றிணைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பொருளாதார நெருக்கடிகள், வரிச்சுமை மற்றும் விவசாயிகள், மீனவர்கள், பட்டதாரிகள், இளைஞர்கள், மாணவர்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணக்கூடிய அனுபவமிக்க ஓர் அரசியல் குழு நாட்டுக்கு அவசியமாகவுள்ளது.

இலங்கையின் எதிர்கால அரசியல் போக்கை மாற்றியமைக்கும் நோக்கில், அனைத்து எதிர்க்கட்சிச் சக்திகளையும் உள்ளடக்கிய ஒரு கூட்டுப் படையைக் கட்டியெழுப்பி, அதனை நாட்டின் அடுத்த தேசியக் குழுவாக மாற்றுவதே இந்தத் தளத்தின் நீண்ட கால இலக்காகும் -என்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் நினைத்த வேகத்தில் சில வேலை களை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப் படுவீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**இடபம்**
மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான் மையும் வந்துச் செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். சகோதரர்களால் பயனடை வீர்கள். உத்தியோகத்தில் தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும்.

**கடகம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். எதையும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை பிறக்கும். உத்தி யோகத்தில் தலைமையின் நம்பிக்கையை பெறு வீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர் கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தி யோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப்போய் முடியும். உத்தியோகத்தில் மற்றவர் களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். பெரிய பொறுப் புகளை ஏற்பீர்கள். தன்னம்பிக்கை பிறக்கும் நாள்.

**விருச்சிகம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைக ளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர் கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**தனுசு**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளை கள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வு டன் செயல்படுவார்கள். நினைத்தது நிறைவேறும்.

**மகரம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத் தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**கும்பம்**
சவால்களில் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் எதிர் பாராத தனலாபம் உண்டு. சில நுணுக்கங்களை கற் றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உத வுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

# கொழும்பு -காங்கேசன்துறை கடுகதி ரயில் சேவை மாற்றம்

கொழும்பு, ஜூலை. 09

இயக்கத்திற்குத் தேவையான போதிய இயந்திரத் தொகுதிகள் இல்லாததன் காரணமாக, தினமும் இயக்கப்பட்டு வந்த கொழும்பு - காங்கேசன்துறை நகராந்தர கடுகதி ரயில் சேவையை வாரத்தில் நான்கு நாள்கள் மாத்திரம் இயக்குவதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, இதற்கு முன்னர் தினமும் காலை 05.15 மணிக்கு கல்கிஸையிலிருந்து ஆரம்பமாகி, காலை 05.45 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்த நகராந்தர கடுகதி ரயிலும், பிற்பகல் 01.50 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து கல்கிஸை நோக்கி பயணித்த ரயிலும், ஜூலை மாதம் 10 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கள்கிழமை ஆகிய நான்கு நாள்கள் மாத்திரம் இயக்கப்படவுள்ளன.

யாழ்தேவி கடுகதி ரயிலும் தற்போது தினமும் இயக்கப்படுவதில்லை என்பதுடன், அது ஒரு நாள் விட்டு ஒரு நாளே இயக்கப்பட்டு வருகின்றது.

இந்த புதிய திருத்தத்தின் காரணமாக, ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளிலும் காலை வேளையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் அல்லது காங்கேசன்துறை வரை பயணிப்பதற்கு எந்தவொரு ரயிலும் இல்லை என ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த நாள்களில் காங்கேசன்துறை நோக்கி பயணிக்கும் ஒரேயொரு ரயில் இரவு 08.00 மணிக்கு புறப்படும் இரவு நேர தபால் ரயில் மாத்திரமே ஆகும்.

ரயில் தட்டுப்பாடு காரணமாக வடக்கிற்கான ரயில் பாதையைப் பயன்படுத்தும் பயணிகள் தற்போதே கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

நிலவும் இப்பிரச்னைகளுக்கு விரைவான தீர்வுகளைக் காண்பதற்கு, பொறுப்புவாய்ந்த திணைக்களத் தலைவர்களோ அல்லது போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளோ இதுவரை முறையான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதன் காரணமாக, எதிர்வரும் காலத்தில் இந்த ரயில் நெருக்கடி மேலும் தீவிரமடையக்கூடும் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் பிரதம செயலாளர் கசன் சாமர ஜயசேகர வலியுறுத்தியுள்ளார். (அ)

# ஏழாவது உலகத் திருக்குறள் மாநாடு இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில்!



சென்னை, ஜூலை 09

புனித ஜோசப் பல்கலைக்கழகம், பெங்களூரு திருவள்ளுவர் சங்கம், தாய்மொழிக் கூட்டமைப்பு இணைந்து நடத்திய ஏழாவது உலகத் திருக்குறள் மாநாடு, இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் பெங்களூரு நகரில் உள்ள புனித ஜோசப் பல்கலைக்கழகத்தில் பெங்களூரு திருவள்ளுவர் சங்கம் மற்றும் கர்நாடக மாநில தாய்மொழிக் கூட்டமைப்பு ஆகியவற்றின் தலைவர் முனைவர் எஸ். டி. குமார் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வின் சிறப்பு அழைப்பாளர்களாக, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் வைத்தியர் இளையதம்பி சிறீநாத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருக்குறள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடு செய்யப்பட்டதுடன், மொழிபெயர்க்கப்பட்ட பதிப்பின் முதற் பிரதியினை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொண்டனர்.

திருக்குறள் மாநாட்டினை, புனித ஜோசப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அருட்திரு விக்டர் லோபா, வைத்தியர் அருள்மணி, இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் மேனாள் இயக்குநர் பத்மசிறீ முனைவர் மயில்சாமி அண்ணாதுரை ஆகியோரு மங்கள விழக்கேற்றி விழாவை தொடக்கிவைத்தனர்.

நிகழ்வில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், கலந்து சிறப்பித்த விருந்தினர்களுக்கு மதிப்பளிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பல்வேறு கலை நிகழ்வுகள் நடைபெற்றதுடன், துறைசார்ந்த அறிஞர்கள், ஊடக நண்பர்கள், கட்டுரை ஆய்வாளர்கள், பல்வேறு மாநில மற்றும் நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள், விஞ்ஞானிகள், எம். ஜி. ஆர் மணி மற்றும் பலர் கலந்துகொண்டனர். (அ)

## பாதசாரி கடவையில் வாகனங்கள் மோதி புளியங்குளத்தில் ஆண் ஒருவர் உயிரிழப்பு!

வவுனியா, ஜூலை. 09

வவுனியா-புளியங்குளத்தில் பாதசாரி கடவையில் வீதியைக் கடந்த நபர் மீது இரு வாகனங்கள் மோதியதில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் புளியங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஹயஸ் ரக வாகனம், பாதசாரி கடவையூடாக வீதியைக் கடந்த நபரை முதலில் மோதியுள்ளது.

அதன் தாக்கத்தில் தூக்கி எறியப்பட்ட அந்த நபர் மீது, யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கார் ஒன்றும் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் காரின் சக்கரங்கள் நபரின் உடலின் மீது ஏறிச் சென்றதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த விபத்தில் சுமார் 55 வயதான ஆண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# பலாலி இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய பிரதான பாதையை திறக்க நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஜூலை.09

பலாலி இராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத் திருவிழாவை முன்னிட்டு, ஆலயத்திற்குச் செல்லும் பிரதான பாதையை பொதுமக்களின் பயன்பாட்டுக்காக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

மக்களின் கோரிக்கைக்கு உடனடியாக பதிலளித்த அமைச்சர், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்கினார். அதன்படி, பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியை நேரில் சந்தித்து, இவ்விடயம் தொடர்பாக விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டார்.

பாதுகாப்பு காரணங்களால் தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள குறித்த பிரதான பாதையை, ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு பக்தர்களின் வசதிக்காக திறந்து வைப்பது குறித்து இந்த சந்திப்பில் முக்கியமாக ஆராயப்பட்டது.

இதன் விளைவாக, ஆலயத் திருவிழா நடைபெறும் காலப்பகுதியில் தினமும் காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை நேரக் கட்டுப்பாட்டுடன் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் குறித்த பாதையை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீர்கொழும்பு சிறை கலவரத்தால் 10 கோடி ரூபாவுக்கு மேல் இழப்பு!

## சிறைச்சாலை உயர் அதிகாரி தகவல்

கொழும்பு, ஜூலை. 09

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலால், சொத்துகளுக்கும் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

கைதிகள் சிறைச்சாலையின் தொலைக்காட்சி அமைப்பு, மருந்து களஞ்சியம், உடல் ஸ்கானர் இயந்திரம், சிசிரிவி கட்டமைப்பு, அலுவலகங்கள் மற்றும் முக்கிய களஞ்சிய அறை உள்ளிட்ட பல முக்கிய இடங்களை அடித்து நொருக்கி நாசப்படுத்தியுள்ளனர்.

இவற்றின் மதிப்பு 10 கோடி ரூபாய்க்கும் அதிகம் என சிறைச்சாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது உத்தேச மதிப்பீடு மாத்திரமே, இந்த வன்முறைச் சம்பவத்தால் சொத்துகள், கட்டடங்களுக்கு ஏற்பட்ட சேதம் அதிகமாக இருக்கலாம் என கருதப்படுகின்றது. இன்னும் அது பற்றிய அதிகாரபூர்வ மதிப்பீடு இடம் பெறவில்லை.

கைதிகளை வெவ்வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்காக சிறைச்சாலை பேருந்துகளில் ஏற்றப்பட்ட பின்னரும், ஒரு குழுவினர் பேருந்திற்குள்ளும் வன்முறையாகவும் பதற்றமாகவும் நடந்துகொண்டதால், அவர்களை மீண்டும் வேறு பேருந்துகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சிறைச்சாலையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவத்திற்குக் காரணமானவராகக் கருதப்படும் பாதாள உலகக் குழுத் தலைவர் 'கெஹெல்பெத்தர பத்மே' என்பவரின் நெருங்கிய கூட்டாளி உட்பட 13 ஆபத்தான கைதிகளும், 55 சாதாரண கைதிகளும் பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டதாக சிறைச்சாலையின் உயர் அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, நீர்கொழும்பு சிறைச்சாலை வெறுமையாக்கப்படவுள்ளது. அங்கு உள்ள எஞ்சிய 500 பேரை காலிப் பகுதியில் உள்ள இடமொன்றுக்கு மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

# ரூ.3 கோடிக்கும் அதிக மதிப்புள்ள ஹெரோயினுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை. 09

வத்தளையில் ரூபா 3 கோடிக்கும் அதிக மதிப்புடைய ஹெரோயினுடன் 34 வயதுடைய ஒருவர் சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வத்தளை, எந்தரமுல்ல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து 3.32 கிலோ கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், அதன் சந்தை பெறுமதி ரூபாய் 3 கோடிக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 34 வயதான சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# மஹமோதரவில் புதிய சிறைச்சாலை!

கொழும்பு, ஜூலை. 09

காலி - மஹமோதர பகுதியில் புதிய சிறைச்சாலையொன்றை நிறுவுவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார இந்த அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இந்த கட்டளை பிரகடனப்படுத் தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் படி, "மஹமோதர" என்ற பெயரில் நிறுவப்படவுள்ள இந்த சிறைச்சாலையின் அதிகாரப் பிரதேசம் முழு இலங்கையையும் உள்ளடக்கும் வகையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது மூடப்பட்டுள்ள மஹமோதர வைத்தியசாலையின் ஒரு பகுதியில் இந்த சிறைச்சாலையை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# எம்.பிக்கள், அரச அதிகாரிகளின் எரிபொருள் கட்டுப்பாடு நீக்கம்!

கொழும்பு, ஜூலை. 09

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு எரிபொருள் வழங்குவதில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நிதி அமைச்சின் செயலாளரினால் இது தொடர்பான புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கை அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், விசேட செலவின அலகுகள், ஆணைக்குழுக்களின் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டிருந்த யுத்த சூழ்நிலை காரணமாக, அரச செலவினங்களை முகாமை செய்யும் நோக்கில் இதற்கு முன்னர் வர்த்தமானி மூலம் இந்த எரிபொருள் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

இருப்பினும், தற்போதைய புதிய சுற்றறிக்கையின் மூலம் அந்த பழைய சுற்றறிக்கை ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு தற்போதைய எரிபொருள் விலைகளின் கீழ் எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# டெங்கு உயிரிழப்பு 42!

கொழும்பு, ஜூலை. 09

நடப்பாண்டில் இதுவரை பதிவான டெங்கு மரணங்களின் எண்ணிக்கை 42 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரை நாட்டில் 63,835 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் பணிப்பாளர் கபில கன்னங்கர குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், பொதுமக்கள் தங்களது சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்துக்கொண்டு நுளம்பு பெருகும் இடங்களை அழிக்க ஒத்துழைக்க வேண்டும் எனவும் சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# விலங்கு தீவனத்துக்கு நெல், அரிசி பயன்படுத்துவதற்கு தடை இல்லை!

கொழும்பு, ஜூலை. 09

விலங்கு தீவன தயாரிப்பிற்காக நெல் மற்றும் அரிசியைப் பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை அதிகாரபூர்வமாக நீக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.

2003ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை சட்டத்தின் கீழ், கடந்த ஜூலை 3ஆம் திகதி வெளியிடப்பட்ட புதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகக் கடந்த 2022ஆம் ஆண்டு ஜூன் 24ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், விலங்கு தீவன தயாரிப்புக்காக நெல் மற்றும் அரிசியை விற்பனை செய்வது, சேமித்து வைப்பது, கொண்டு செல்வது அல்லது வாங்குவது போன்ற நடவடிக்கைகளுக்கு நுகர்வோர் விவகார அதிகார சபையினால் தடை விதிக்கப்பட்டிருந்தது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள புதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அந்த 2022ஆம் ஆண்டு உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளதுடன், விலங்கு தீவனத்திற்காக நெல் மற்றும் அரிசியைப் பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த அனைத்துக் கட்டுப்பாடுகளும் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன. (அ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சம்மாந்துறை பகுதிக்கும் டெங்கு பரவும் அபாயம்!

## மக்கள் அவதானமாக இருக்குமாறு சுகாதாரப் பிரிவு வேண்டுகோள்

அம்பாறை, ஜூலை. 09

மேல் மாகாணத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதால், உயர்கல்வி, தொழில், வர்த்தகம் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக அங்கிருந்து கிழக்கு மாகாணம் உட்பட பிற பகுதிகளுக்கு வருகை தரும் நபர்கள் ஊடாக டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு எச்சரித்துள்ளது.



இதனையடுத்து, சமூகத்தில் டெங்கு பரவலைத் தடுக்கும் நோக்கில் பொதுமக்கள் கூடுதல் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும், குறிப்பாக மேல் மாகாணத்திலிருந்து காய்ச்சலுடன் அல்லது டெங்கு தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் வருகை தருபவர்கள் குறைந்தது 14 நாள்கள் பகல் வேளைகளில் நுளம்பு கடியிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்காக, உடல் முழுவதையும் மூடும் ஆடைகளை அணிவதுடன், நுளம்பு விரட்டி கிரீம்கள் அல்லது ஏற்ற பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் பெரும்பாலும் பகல் வேளைகளில் கடிப்பதால், இந்தக் காலப்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகவும் அவசியமானவை என சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், காய்ச்சல், கடுமையான தலைவலி, உடல்வலி, கண் பின்னால் வலி அல்லது வேறு டெங்கு அறிகுறிகள் தென்பட்டால், காலதாமதம் செய்யாமல் உடனடியாக அருகிலுள்ள அரச மருத்துவமனை அல்லது சுகாதார நிலையத்தை அணுகுமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், வீடுவீடாக மேற்கொள்ளப்படும் நுளம்பு பெருகும் இடங்களை கண்டறியும் பரிசோதனைகள் மற்றும் சுற்றுச்சூழல் சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# திருமலை மாவட்ட சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் புதிய அரசு ஆர்வம்!

திருமலை, ஜூலை. 09

திருகோணமலை மாவட்டத்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் புதிய அரசு காட்டும் ஆர்வம் குறித்து, திருகோணமலை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் அரசாங்கத்திற்கு தனது பாராட்டுகளைத் தெரிவிப்பதாக அதன் தலைவர் பி. குலதீபன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் திருகோணமலையில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், திருகோணமலை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம், இந்தியாவின் வர்த்தக சம்மேளனங்களுடன் சுற்றுலாத்துறை தொடர்பாக பல ஒப்பந்தங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தங்களுக்கு அரசாங்கத்தின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும், இதன் மூலம் திருகோணமலை மாவட்டத்தின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்து, நாட்டின் பொருளாதாரத்தை உற்பத்தித்திறன் மிக்க நிலைக்கு கொண்டு செல்ல முடியும் எனவும் அவர் மேலும் கூறினார்.

(அ)

# 8 தினங்களின் பின் நேற்று உகந்தமலையை அடைந்தது யாழ்-கதிர்காமம் பாதயாத்திரை!



காரைதீவு, ஜூலை. 09

யாழ்ப்பாணம் செல்வச்சந்நதி ஆலயத்திலிருந்து கடந்த மே மாதம் 23ஆம் திகதி கதிர்காமத்திற்கான பாதயாத்திரையை ஆரம்பித்த ஜெயாவேல்சாமி தலைமையிலான பாதயாத்திரைக்குழுவினர் 48 நாள்களின் பின்னர் நேற்று புதன்கிழமை, கிழக்கின் தென்கோடியிலுள்ள உகந்தமலை முருகனாலயத்தை சென்றடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை குழுவினர் சன்னியாசிமலையடி வாரத்திலிருந்து 48ஆவது நாள் யாத்திரையை ஆரம்பித்து முற்பகல் 11.00 மணியளவில் உகந்தமலையை சென்றடைந்தனர். கடந்த 48 தினங்கள் விடாமல் தொடர்ந்து நடந்துவந்த அவர்கள் இன்றைய தினம் அங்கு ஓய்வுபெறுவார்கள்.

இந்தக் குழுவில் 145 அடியார்கள் கலந்துகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# பாடசாலை மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சி முகாம்!

அம்பாறை, ஜூலை. 09



அவசரகால சூழ்நிலைகளில் சரியான முதலுதவியை வழங்கும் அறிவு மற்றும் திறன்களை பாடசாலை மாணவர்களிடையே மேம்படுத்தும் நோக்கில், இறக்காமம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட முதலுதவி பயிற்சி முகாம் கடந்த செவ்வாய்க்கிழமை வரிப்பத்தான்சேனை அல்-அமீன் மகா வித்தியாலயத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது.

இறக்காமம் பிரதேச செயலாளர் அஷ்-ஷெய்க் எம்.எஸ்.எம். றஸ்ஸான் (நளீமி) ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ், உதவிப் பிரதேச செயலாளர் அய்மா நிஃமத்துல்லா தலைமையில் இப்பயிற்சி முகாம் நடைபெற்றது.

தலைமை உரையாற்றிய உதவிப் பிரதேச செயலாளர், ஒவ்வொருவரும் முதலுதவி தொடர்பான அடிப்படை அறிவைப் பெற்றிருப்பது அவசரநிலைகளில் உயிர்களைக் காப்பாற்ற உதவும் முக்கியமான சமூகத் திறனாகும் எனக் குறிப்பிட்டதுடன், மாணவர்கள் இவ்வாறான பயிற்சிகளைப் பெற்று சமூகப் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

பயிற்சியின் வளவாளராக கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் தொற்றா நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எஸ்.எம். பௌஷாட் கலந்துகொண்டு, விபத்துகள் மற்றும் திடீர் உடல்நலக் குறைபாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் உடனடியாக மேற்கொள்ளவேண்டிய முதலுதவி நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தார்.

பங்கேற்ற மாணவர்கள் செயன்முறைப் பயிற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு, பல்வேறு கேள்விகளை எழுப்பி தெளிவுகளைப் பெற்றதுடன், அவசரநிலைகளை எதிர்கொள்ளும் நடைமுறைத் திறன்களையும் கற்றுக்கொண்டனர். (அ)

# நாளை காலை காட்டுப்பாதை திறப்பு!

காரைதீவு, ஜூலை. 09

கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் உகந்தமலை முருகன் ஆலய அதிகாலை விசேட பூசையின் பின்னர் அம்பாறை மற்றும் மொனராகலை அரசாங்க அதிபர்கள் முன்னிலையில் திறந்து வைக்கப்படும்.

முதல் நாளில் சுமார் 8 ஆயிரம் பேர் பயணிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்முறை வழமைக்கு மாறாக காட்டுப்பாதையால் பயணிப்போருக்கு பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

உகந்தமலை முருகன் ஆலயத்திலிருந்து குமுக்கனூடாகயால வனப்பகுதியூடாக பாத யாத்திரீகள் செல்லும்போது யாரும் உணவுப் பார்சல்களையோ பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தல்களையோ வழங்கமுடியாது. இது கட்டாயம் அமுல்படுத்தப்படும்.

கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் போத்தல்கள் உணவுக்கழிவுகள் என்பன காட்டு விலங்குகளுக்கு ஆபத்தாக அமைகின்றன.

எனவே இவற்றை வழங்கமுடியாது. இதனை வனஜீவராசிகள் திணைக்களத்தினர், பொலிஸார் கண்காணிப்பார்கள். (அ)

# நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து 60 கைதிகள் மட்டக்களப்புக்கு மாற்றம்

கொழும்பு, ஜூலை. 09

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்து விசேட அதிரடிப் படையின் பலத்த பாதுகாப்புடன் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு 60 கைதிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அழைத்து செல்லப்பட்டு சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திக்கரங்கன பெரேராவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பொலனறுவை சிறைச்சாலைக்கு 63 பேர் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கைதிகளுக்குள் இடம்பெற்ற மோதலையடுத்து சிறைச்சாலை அதிகாரிகள் 07 பேர் உட்பட 26 பேர் உயிரிழந்ததுடன் 100 பேர் வரை படுகாயமடைந்தனர்.

இந்த சம்பவத்தையடுத்து அங்கிருந்த 60 கைதிகள், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டதையடுத்து சிறைச்சாலை பகுதியை சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, 400 கைதிகளைப் பராமரிக்கக்கூடிய மட்டக்களப்பு சிறைச்சாலையில் 960 கைதிகள் பல இடநெருக்கடிகளுக்கு மத்தியில் இருந்து வரும் நிலையில் நீர்கொழும்பு சிறையில் இருந்து 60 கைதிகள் கொண்டு வரப்பட்டதையடுத்து ஆயிரத்து 20 கைதிகள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சித்தர்களின் கதிர்காம ஆயிரம் வேல்யாத்திரை நாளை ஆரம்பம்!

அம்பாறை, ஜூலை. 09

சித்தர்களின் குரல் கதிர்காம கானக ஆயிரம் வேல் யாத்திரை நாளை வெள்ளிக்கிழமை உகந்தைமலையில் இருந்து நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகும் என சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் சிவசங்கர் ஜீ உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

மேலும், இக் கதிர்காமத்திற்கான கானக வேல் யாத்திரை ஜூலை 15ஆம் திகதி புதன்கிழமை கதிர்காமத்தை சென்றடையும் எனவும் அவர் கூறினார்.

அதற்கு முன்னதாக, பாரம்பரிய முறைப்படி குறித்த வேல் யாத்திரை வேலோடுமலையில் இருந்து கடந்த ஜூலை 02 ஆம் திகதி வேலோடுமலை முருகன் கோவில் ஆதீனகர்த்தா முருக பக்தர் தியாகராஜ சுவாமிகள் தலைமையில் சில பக்தர்களுடன் ஆரம்பமாகி நேற்று உகந்தமலை முருகன் ஆலயத்தை சென்றடைந்தது.

எனினும், அனைத்து அடியார்களும் கலந்து கொள்ளும் கானக வேல் யாத்திரை நாளை உகந்தமலை முருகன் கோவிலில் இருந்து ஆரம்பமாகும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நீர்கொழும்பு சிறை...

பெரேரா தலையிட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, கைதிகளை மீண்டும் சிறை அறைகளுக்குள் அனுப்பியுள்ளார்.

இதனால் நேற்று முற்பகல் நீர்கொழும்பு சிறைச்சாலையை சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.இந்த நிலையில், மோதல் இடம்பெற்ற தினத்தன்று நீர்கொழும்பு சிறைச்சாலை அதிகாரிகளிடம் இருந்த ரிப்பீட்டர் ரக துப்பாக்கி ஒன்று காணாமல் போயுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. (அ)

## பாதாளக் குழுக்களோடு...

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன், நாட்டில் பாதாள உலகக் குழுக்கள் என்று குறிப்பிடும் போது, ஏதாவது ஒரு வழியில் ராஜபக்ஷக்கள் அவர்களுடன் தொடர்புப்பட்டிருப்பதே உண்மை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

அங்கு பிரதி அமைச்சர் மேலும் உரையாற்றியதாவது:-

தற்போது நாட்டில் போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தலுக்கு எதிராக அரசால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் போதைப்பொருள் வர்த்தகர்கள் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்கள், அரசின் இந்த வேலைத்திட்டங்களை நெருக்கடிக்குள்ளாக்குவதற்குப் பல்வேறு சதி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். எனினும், அவர்களின் அந்த முயற்சிகள் ஒருபோதும் வெற்றி பெறாது. நீர்கொழும்பு சிறைச்சாலை மோதலைத் தடுப்பதற்கு நீதி அமைச்சர் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்துகின்றார். ஆனால், நீர்கொழும்பு சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு நீதி அமைச்சர் தெளிவான விவரங்களை வழங்கியுள்ளார். இதில் எதனையும் மறைக்க வேண்டிய தேவை தற்போதைய அரசுக்கு இல்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் தங்காலை சிறைச்சாலையில் பாரிய கலவரம் ஒன்று ஏற்பட்டது. அப்போது கலவரத்தில் ஈடுபட்ட பாதாள உலகக் குழு உறுப்பினரான "ஜூலம்பிட்டியே அமரே" என்பவரைப் பார்ப்பதற்கு மகிந்த ராஜபக்ஷ நேரடியாகவே சிறைச்சாலைக்குச் சென்றார். அங்கு சென்று, "அமரே நான் வந்துவிட்டேன், கலவரத்தை நிறுத்து" என்று மகிந்த ராஜபக்ஷ கூறினார். உடனடியாக அந்தப் பாதாள உலகக் குழு உறுப்பினர் கலவரத்தை நிறுத்தினார். இதுதான் இவர்களது பின்னணி.

ஆனால், தற்போதைய நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார சிறைச்சாலைக்குச் சென்று, மகிந்த ராஜபக்ஷவைப் போன்று எவரையும் பெயர் குறிப்பிட்டு எந்தவொரு பாதாள உலகக் குழு உறுப்பினரையும் அழைக்கவில்லை. நாட்டின் தற்போதைய சிறைக் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசால் முறையான மற்றும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

## போரினால் இடம்பெயர்ந்த...

2027ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் மற்றும் நிதித் தேவைகள் குறித்து, தனித்தனியாக கலந்துரையாடப்பட்டது.

வெவ்வேறு அமைச்சுகளின் கீழ், ஒரே விடயப்பரப்புடன் தொடர்புடைய பல நிறுவனங்கள் காணப்படுவதனால்,

திட்டங்களைச் செயற்படுத்துவதில் செயற்திறனின்மை ஏற்பட்டுள்ளதாகவும், பல வருடங்களுக்கு முன்னர், வெவ்வேறு நோக்கங்கள் மற்றும் தேவைகளுக்காக நிறுவப்பட்ட நிறுவனங்களை மேலும் பராமரித்துச் செல்வதன் மூலம், அரசாங்கத்திற்கு கூடுதல் நிதிச்சுமையை சுமக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி,

அவ்வாறான உற்பத்தித்திறனற்ற அனைத்து நிறுவனங்களையும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

அத்துடன், கண்டி - வடக்கு ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம், கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவத் திட்டம், அம்பத்தலே நீர் வழங்கல் திட்டம், அநுராதபுரம் - வடக்கு நீர் வழங்கல் திட்டம் உள்ளிட்ட பிரதான நீர் திட்டங்களின் செயற்பாடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

நாடளாவிய ரீதியில், மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, வரலாற்றில் ஒதுக்கப்படும் அதிகூடிய வரவு செலவுத் திட்ட நிதியை, 2027 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்வது குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன் போது, மீள்குடியேற்ற வேலைத்திட்டம் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் வேலைத்திட்டத்தை விரைவுபடுத்துமாறும், குறைந்த வருமானமுடைய மக்களால் கட்டப்பட்ட வீடுகளுக்கு, வீட்டு வசதி உதவி வழங்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறும், ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

அரசாங்கத்தின் வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டமான, "தமக்கென ஒரு இடம் - அழகான வாழ்க்கை" என்பதன் முன்னேற்றம் மற்றும் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு குறித்தும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க, தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் ஜெயந்த பெர்னாண்டோ,

வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் பிரதி அமைச்சர் டி.பி. சரத் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (அ)

## இலங்கை சிறைச்சாலை...

வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தத் துயரச் சம்பவத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறை அதிகாரிகள் அரசுக்கும் பொதுமக்களுக்கும் சேவை செய்வதில் மிகவும் சவாலான பொறுப்புகளை ஏற்றுள்ளனர் என்றும், அவர்களின் இழப்பு ஆழமாக உணரப்படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, சம்பவத்தில் பாதிக்கப்பட்ட கைதிகள் அரசின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பின் கீழ் இருந்தவர்கள் என்பதால், சிறை அதிகாரிகளும் கைதிகளும் சமமான பாதுகாப்பைப் பெறுவது அரசின் அடிப்படைப் பொறுப்பாகும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம், இலங்கையின் சிறைச்சாலை அமைப்பில் விரிவான சீர்திருத்தங்கள் அவசியமானவை என்பதை மீண்டும் எடுத்துக்காட்டுவதாக மார்க் அண்ட்ரே பிரெஞ்ச் தெரிவித்துள்ளார். சிறைச்சாலைகளில் நிலவும் அதிக நெரிசல், காலாவதியான நடைமுறைகள் மற்றும் தடுப்புக்காவல் நிலையங்களில் காணப்படும் வசதிக்குறைபாடுகள் ஆகியவை இலங்கை மட்டுமின்றி உலகளாவிய சிறைச்சாலை அமைப்புகளும் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களாக உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இச்சம்பவத்தை விசாரிப்பதற்காக சுயாதீனக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதை ஐக்கிய நாடுகள் சபை வரவேற்றுள்ளதுடன், அந்தக் குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

மேலும், சிறைச்சாலை பாதுகாப்பை வலுப்படுத்துதல், தடுப்புக்காவல் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் சிறைச்சாலை ஊழியர்களின் நலனை உயர்த்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் தொடர்ந்தும் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தனது அறிக்கையில் உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

## வடக்கு - கிழக்கில்...

சொந்தமான பகுதிகளில் காணப்படும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களே தற்போது அடையாளப்படுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் அரச ஆதரவுடன் தொல்லியல் மற்றும் புராதன சின்னங்கள் அழிக்கப்பட்டதாகவும், தொல்லியல் பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் அவ்வாறான நடவடிக்கைகளுக்கு இடமில்லை என்பதுடன், எஞ்சியுள்ள தொல்லியல் சின்னங்களையாவது எதிர்கால தலைமுறைக்காகப் பாதுகாக்கவேண்டியது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த கால நிர்வாகத்தின் தாக்கத்தினால் சிலர் இன மற்றும் மத முரண்பாடுகளை உருவாக்கும் நோக்கில் தொல்லியல் சின்னங்களை அழிக்க முயற்சிப்பதாகவும், அதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என்றும் அமைச்சர் சந்தன அபேரத்ன கூறியுள்ளார். (அ)

## சபையில் கஜேந்திரகுமாரின்...

இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு அடுத்ததாக யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனின் ஆசனம் அமைந்திருந்தது.

ஆனால் அர்ச்சுனா இராமநாதனுக்கு அருகில் உள்ள தனது ஆசனத்தை அரசியல் கட்சி மற்றும் சிரேஷ்டத்துவம் அடிப்படையில் வேறு இடத்துக்கு மாற்றுமாறு கஜேந்திரகுமார், சபாநாயகருக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

பாராளுமன்றத்தில் எனக்கு இடதுபுறத்தில் அமர்ந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், பொது வெளியிலும், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும், சமூக ஊடகங்களிலும் என்னைத் தொடர்ந்து அவதூறாகப் பேசி, மிரட்டல் விடுத்து, இழிவான சொற்களைப் பயன்படுத்தி வருகிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அண்மைக் காலத்தில் அவரது இந்த நடத்தை மிகவும் மோசமடைந்துள்ளதால், பாராளுமன்ற சபைக்குள் அவர் எனக்கு அருகில் அமர்ந்திருப்பது எனது கவனத்தைச் சிதறடிப்பதுடன், அவ்வாறு அமர்ந்திருப்பது சாத்தியமற்றதொன்றாக மாறியுள்ளது.

குறித்த உறுப்பினர் ஒரு சுயேச்சைக் குழுவிலிருந்து முதன் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆவார். பொதுவாக, இத்தகைய உறுப்பினர்களுக்கு, சிரேஷ்ட தலைவர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களுக்குப் பின்னரே ஆசனங்கள் ஒதுக்கப்படுவது வழக்கம். இருப்பினும், வழமையான நடைமுறைக்கு மாறாக, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு இடையில் குறித்த பாராளுமன்ற உறுப்பினர் அமருவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயத்தில் நீங்கள் தலையிட்டு, சுயேச்சை பாராளுமன்ற உறுப்பினர்களை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி உறுப்பினர்களுக்குப் பின்னால் அமரவைக்கும் வழமையான நடைமுறையின்படி, குறித்த பாராளுமன்ற உறுப்பினரை எனக்கு அருகிலிருந்து மாற்றி, இடதுபுறமாக நகர்த்துமாறு கேட்டுக்கொள்கிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் எழுத்துமூலம் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த கோரிக்கைக்கமைய எதிர்க்கட்சிப் பக்கத்தில் நான்காவது நிரையில் முதல் வரிசையில் முதலாவது இடத்துக்கு அவரின் ஆசனம் மாற்றப்பட்டுள்ளது. அத்துடன் கஜேந்திரகுமாருக்கு அடுத்ததாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் ஆசனமும் அடுத்ததாக தொழில் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் ஆசனமும் மாற்றப்பட்டுள்ளது. எனினும் அர்ச்சுனா இராமநாதனின் ஆசனம் ஏற்கனவே இருந்த இடத்திலேயே உள்ளது. (அ)

## பலாலிக் காணிகள்...

காணிகள் விடுவிக்கப்படவில்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை பாராளுமன்ற கேள்வி பதில் நேரத்தின் போது உரையாற்றிய அவர், தேசிய மக்கள் சக்தி வடக்கில் பலாலியில் காணி விடுவிப்பை தேர்தல் விஞ்ஞாபனமாக கூறி வெற்றி பெற்ற போதிலும், அங்கு இன்றளவிலும் பல காணிகள் விடுவிக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

பொதுமக்களின் நிலங்கள் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதும், பொதுமக்கள் வாழும் பகுதிகளில் நீண்டகாலமாக இராணுவம் நிலைகொண்டிருப்பதும், சாதாரண சிவிலியன் நிர்வாகத்தைத் தாமதப்படுத்துவதுடன், நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் முயற்சிகளையும் பலவீனப்படுத்துகிறது.

உண்மையான தேசிய பாதுகாப்புத் தேவைகள் தவிர, இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு நிகரான அளவுக்கு இராணுவப் பரவலாக்கம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்படுவதும், இராணுவமயமாக்கல் நீக்கப்படுவதும் நல்லிணக்கம், மீள்குடியேற்றம் மற்றும் பொருளாதார மீட்சி ஆகியவற்றிற்கு அவசியமானவையாகும். பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற ஆலோசனைக் குழுவில் நான் முன்வைத்த கோரிக்கைகளைத் தொடர்ந்து, மட்டக்களப்பில் இரண்டு இராணுவ முகாம்கள் விடுவிக்கப்பட்டதை நான் வரவேற்கிறேன்.

நிலங்கள் விடுவிக்கப்படும் வேகம் மந்தமாக இருப்பதற்கு எதிராகப் பாதிக்கப்பட்ட பல சமூகங்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர்-என்றார். (அ)

## ரணில் மீதான...

ஆலோசனையைப் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, சட்ட மாஅதிபரின் ஆலோசனை கிடைக்கும் வரை வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 30ஆம் திகதி வரை ஒத்திவைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன, பயணச் செலவில் பாதியளவு போக்குவரத்துக்காகவே பயன்படுத்தப்பட்டதாகவும், போக்குவரத்து வசதியை பிரிட்டன் அரசாங்கமே வழங்கியதாகவும் தெரிவித்து அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். (அ)

## செம்மணி புதைகுழி...

இதேவேளை தமது பூர்வீக காணிவிடுவிப்பிற்காக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாப்பிலவு மக்களை பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர நேரில் சந்தித்துக் கலந்துரையாட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினரால் மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் விசாரணை நடாத்தப்பட வேண்டும்.

செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் உண்மைகளை வெளிப்படுத்தக்கூடாதென அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தன்னிடம் கேட்டுக்கொண்டதாக தகவல்களை சோமரத்ன ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ளார்.

அப்போதைய அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளேயினால் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் மூலம் கடிதம் ஒன்று தமக்கு அனுப்பி வைத்திருந்ததாகவும், அந்தக் கடிதத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவே அனுப்பிவைத்திருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

, மனிதப் புதைகுழி தொடர்பில் எதனையும் கூறவேண்டாமெனவும், பொதுமன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென அந்தக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே சோமரத்ன ராஜபக்ஷ வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றுதான் செம்மணியோடு சார்ந்த மக்கள் எல்லோரும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

செம்மணி மனிதப்புதைகுழியுடன் தொடர்புடைய அனைத்துக் குற்றவாளிகளும் கைதுசெய்யப்பட வேண்டும். அவர்களுக்கெதிராக மிகக்கடுமையான நடடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இவ் உயரிய சபையின் ஊடாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள கேப்பாப்புலவு மக்கள் தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்கமாறு வலியுறுத்தி இன்றோடு 15ஆவது நாளாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 5ஆம் திகதி காணி விடுவிப்பை வலியுறுத்தி அந்த மக்களால் பாரிய ஆர்ப்பாட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக கேப்பாப்பிலவில் 55 குடும்பங்களுக்குரிய 59.5 ஏக்கர் பூர்வீக வாழ்விடக் காணிகளும் 04 குடும்பங்களுக்குரிய 100 ஏக்கர் மத்திய வகுப்புக் காணிகளுமாக மொத்தம் 59 குடும்பங்களுடைய 159.5 ஏக்கர் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர்.

இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள குறித்த பகுதிக்குள் பாடசாலை, பொதுநோக்கு மண்டபம், கோயில், விளையாட்டு மைதானம் உள்ளிட்ட கட்டமைப்புக்கள் காணப்படுகின்றன. தென்னை, மா, பலா, பனை, வேம்பு உள்ளிட்ட பயன்தரு மரங்களும் காணப்படுகின்றன.

மக்களுடைய பெருமளவான கால்நடைகளை இராணுவத்தினர் அந்தப் பகுதிக்குள் அபகரித்து வைத்திருப்பதாகவும், பால் உற்பத்தியை பெறுவதாகவும் மக்களால் எம்மிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருகைதரவுள்ளதாக அறிய முடிகின்றது. அவ்வாறு வருகை தருகின்ற பாதுகாப்பு பிரதி அமைச்சர் காணி விடுவிப்பை வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாப்பிலவு மக்களைச் சந்தித்துக் கலந்துரையாட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# நீர்கொழும்பு போன்றதொரு வன்முறை இனிமேலும் நடக்காதிருக்க நடவடிக்கை!

## சபையில் அமைச்சர் சந்திரசேகர்

கொழும்பு, ஜூலை. 09

"நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் போன்றதொரு சம்பவம் எமது ஆட்சியில் இடம்பெற்றிருக்கவே கூடாது. எனினும் இனிமேலும் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்கும் வகையில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்" என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவமானது சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வை வெளிப்படுத்தும் ஒரு குறியீடாகும். வறுமை எங்கு அதிகமாக உள்ளதோ, அங்கு கல்வி பின்தங்கியிருக்கும். இவ்வாறு வறுமையும் கல்வியறிவும் பின்தங்கியுள்ள இடங்களில் வன்முறைக் கலாசாரம் தலைதூக்கும்.

இதனால்தான், எமது அரசாங்கம் நாட்டு மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. மக்களை வறுமையிலிருந்து விடுவித்தால், அவர்கள் கல்வியில் எழுச்சி பெறுவார்கள் தவறான கலாசாரமும் முடிவுக்கு வரும்.

சிறைக்கைதிகளும் மனிதர்களே! இப்படிப்பட்ட மனிதர்கள் இருந்த இடத்தில் ஏன் அப்படியொரு சம்பவம் இடம்பெற்றது? எமது இளைஞர்களைப் போதைப் பொருள் வியாபாரிகளாகவும், கொலைகாரர்களாகவும் மாற்றிய பாழாய்ப்போன (அவதூறான) அரசியலை முன்னெடுத்தவர்கள் யார்? கடந்த கால ஆட்சியாளர்களே இப்படியான கலாசாரத்தைக் கொண்டுவந்தனர்.

யாழ்ப்பாணம் என்பது கலாசாரம் மற்றும் பண்பாட்டு ரீதியாகக் கொடிகட்டிப் பறந்த இடமாகும். ஆனால், இன்று அங்கு போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளது. போதைப் பொருள் வியாபாரிகளிடமிருந்து எமது பிள்ளைகளைப் பாதுகாத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போது நாடு தழுவிய ரீதியில் போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும், இது தொடர்பாக இன்னும் பல கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

கடந்த 1983ஆம் ஆண்டில் குட்டிமணி உட்பட 53 தமிழ்க் கைதிகள் இரண்டு நாள்களாகக் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இதற்குப் பின்னணியில் அரசியல் வாதிகள் இருந்தனர். நாம் தற்போது அரசியல் ரீதியில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றோம்.

ஆனாலும், சுயநலமிக்க அரசியல்வாதிகள் பழைய கலாசாரத்தையே விரும்புகின்றனர். நீர்கொழும்பு சம்பவம் அதன் ஓர் அங்கமா என்ற சந்தேகமும் எழுகின்றது.

எமது ஆட்சியில் நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவம் போன்றதொரு சம்பவம் இடம்பெற்றிருக்கக் கூடாது. இனிவரும் காலங்களில் அவ்வாறான சம்பவங்களுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் - என்றார். (அ)

## நீர்கொழும்பில் இருந்து மாற்றப்பட்ட கைதிகளின் பாதுகாப்பை உடனே உறுதிப்படுத்தக் கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 09

நீர்கொழும்பு சிறையிலிருந்து மாற்றப்பட்ட கைதிகள் மற்ற சிறைகளில் கடுமையான உடல் ரீதியான தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுவதாக கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்ட அவசர அறிவிப்பில் இது தொடர்பில் தங்களுக்குத் தொடர்ச்சியான தகவல்கள் கிடைத்துள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அங்குனகொலபெலஸ்ஸ சிறைக்கு மாற்றப்பட்ட கைதிகள் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் அவர்களில் சிலருக்குக் கால் முறிவுகள் மற்றும் முதுகில் வெட்டுக்காயங்கள் உள்ளிட்ட கடுமையான காயங்கள் ஏற்பட்டதாகவும் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு தெரிவித்துள்ளது.

வெலிக்கடை சிறைக்கு மாற்றப்பட்ட கைதிகள் மீது தாக்குதல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

இதுபோன்ற தாக்குதல்களை உடனடியாகத் தடுத்து நிறுத்தவும் காயமடைந்த கைதிகளுக்கு உடனடி மருத்துவ சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்யவும் நீர்கொழும்பு சிறையிலிருந்து மாற்றப்பட்ட அனைத்து கைதிகளின் பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் அளிக்கவும் அதிகாரிகள் தலையிட வேண்டும் என கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு வலியுறுத்தியுள்ளது. (அ)

## பொது போக்குவரத்து துறையில் விரைவில் புதிய சீர்திருத்தங்கள்!

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க



கொழும்பு, ஜூலை. 09

சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட பஸ் கட்டண அதிகரிப்பு மற்றும் பொதுப் போக்குவரத்து துறையில் கொண்டு வரப்படவுள்ள புதிய சீர்திருத்தங்கள் குறித்து போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 18 மாதங்களாக நாட்டில் எரிபொருள் விலை அதிகரிக்காததால் பஸ் கட்டணங்களை மாற்றமில்லாமல் பராமரிக்க முடிந்தது. அமெரிக்காவினால் தொடங்கப்பட்ட ஈரான் போரின் காரணமாக உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்ந்ததால், பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அமைச்சரவை 15 வீத உயர்வுக்கு அனுமதி அளித்திருந்த போதிலும், பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்ட நாளில் உள்நாட்டில் எரிபொருள் விலை சற்று குறைந்ததால், அது 12 வீதமாகக் குறைத்து அமுல்படுத்தப்பட்டது.

எதிர்வரும் மாதங்களில் எரிபொருள் விலை குறையும் பட்சத்தில், பஸ் கட்டணங்கள் படிப்படியாகக் குறைக்கப்படும். ரயில் கட்டணங்களை உயர்த்தும் எண்ணம் தற்போதைக்கு இல்லை.

இதற்கு முன் சாதாரண பஸ் கட்டணத்தை அடிப்படையாகக் கொண்டு 1:2:3 என்ற விகிதத்தில் சாதாரண, சொகுசு, அதிசொகுசு பஸ் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன.

இனிமேல் இந்த முறை கைவிடப்பட்டு, சொகுசு பஸ்களுக்கான கட்டண உயர்வு விகிதம் குறைக்கப்படும். இதனால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், அநுராதபுரம் போன்ற தூர இடங்களுக்கு சொகுசு பஸ்களில் பயணிக்கும் மக்களுக்கு கூடுதல் சலுகை கிடைக்கும்.

பழைய கட்டண முறையின்படி தூரம் அதிகரிக்க அதிகரிக்க பஸ்களுக்கு நட்டம் ஏற்படும் நிலை இருந்ததால், தூரப்பயண பஸ்கள் அதிக வேகத்துடனும் விபத்துக்களை ஏற்படுத்தும் வகையிலும் இயங்கின. இதற்கு தீர்வாக, அதிகாரிகள் மற்றும் தன்னார்வலர்கள் இணைந்து துல்லியமான புதிய கட்டண சூத்திரம் ஒன்றை தயாரித்துள்ளனர்.

இதன் கீழ் பஸ்கள் "சாதாரண பஸ்கள்" மற்றும் "சொகுசு பஸ்கள்" என இரு வகையாக மட்டுமே பிரிக்கப்படும். "அதிசொகுசு" என்ற வகைப்பாடு நீக்கப்படும்-என்றார். (அ)

## நெல்லைக் குறைந்த விலையில் விற்கும் நிலையில் விவசாயிகள்

### தேசிய விவசாய அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை. 09

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட உத்தரவாத விலைக்கு நெல்லைக் கொள்முதல் செய்ய எவரும் முன்வராத காரணத்தினால், விவசாயிகள் தங்களது நெல்லை குறைந்த விலைக்கு விற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று தேசிய விவசாய அமைப்பின் தலைவர் கருணாரத்ன ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நமது நாட்டின் விவசாயிகளுக்குப் பல பொய்களைக் கூறி, ஆயிரக்கணக்கான போலி வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தனது இரண்டு வருட காலப் பயணத்தில் என்ன நிரூபித்துள்ளது என்பதை நாம் அனைவரும் அறிவோம். நமது நாட்டின் விவசாயிகள் எதிர்கொள்ளும் இந்த துரதிர்ஷ்டவசமான நிலையிலிருந்து அவர்களை மீட்பதற்கு, இந்த அரசாங்கத்திடம் நிலையான விவசாய கொள்கை ஏதேனும் இருக்கிறதா? அறுவடைக்கான விலைக்கொள்கை ஏதேனும் இருக்கிறதா? உர விநியோகத்திற்கான கொள்கை ஏதேனும் இருக்கிறதா? நிலக்கொள்கை ஏதேனும் இருக்கிறதா? இவை எதற்கும் பதில் இல்லை.

விவசாயிகள் இப்போது இருக்கும் நிலையிலிருந்து அவர்களை முன்னேற்றுவதற்கான எந்தவொரு தொலைநோக்கு பார்வையும், நடைமுறைத் திட்டமும் இந்த அரசாங்கத்திடம் இல்லை. நமது நாட்டின் நெல் விவசாயிகள் தங்களது அறுவடைக்கு நியாயமான விலையைப் பெறுவதற்கும், தங்களது நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்கும் வீதிக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அன்று, ஒவ்வொரு வயல்வெளியாகச் சென்று, மக்களுடன் இணைந்து போராட்டம் நடத்தி, நியாயமான விலையைப் பெற்றுத் தருவதாக வாக்குறுதி அளித்த அரசாங்கம் தான், இன்று இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

நாட்டின் தேசிய விவசாயக் கொள்கையின் சீரழிவு காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. உரப் பற்றாக்குறை மற்றும் விவசாயப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்காததால் விவசாயத் துறை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் இந்த நிலைமைக்கு அரசாங்கமும் அமைச்சர்களும் தான் பொறுப்பேற்க வேண்டும் - என்றார். (அ)

## மன்னார் வைத்தியசாலைக்கு இவ்வாண்டுக்குள் சி.ரி. ஸ்கானர்

### சுகாதார அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஜூலை. 09

மன்னார் மற்றும் சிலாபம் பொது மருத்துவமனைகளுக்கு இந்த ஆண்டுக்குள் சி.ரி. ஸ்கானர் இயந்திரங்கள் வழங்கப்படும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர், பணியாளர்கள் மற்றும் மருத்துவமனை அபிவிருத்திக் குழுவினரால் சிடி ஸ்கேனர் இயந்திரம் ஒன்றின் தேவை குறித்து கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் பாராளுமன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நான் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்குச் சென்றிருந்தபோது, பணிப்பாளர் மற்றும் பணியாளர்கள், அதேபோன்று மருத்துவமனை அபிவிருத்திக் குழுவினரும் ஒரு சி.ரி. ஸ்கானர் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பான இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தனர். 2025 ஆம் ஆண்டில் இதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. நாம் 2026 ஆம் ஆண்டில் நிதியை ஒதுக்கினோம்.

அதற்கமைய, சிலாபம் மாவட்ட பொது மருத்துவமனைக்கும் மன்னார் பொது மருத்துவமனைக்கும் சி.ரி. ஸ்கானர் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான கொள்முதல் நடவடிக்கைகள் மற்றும் ஆவணங்களைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி, இன்னும் சுமார் ஒன்றரை மாதங்களில் எம்மால் கேள்விகோரல்களை திறக்க முடியும். இந்த சி.ரி. ஸ்கானர் இயந்திரத்தை இவ்வருடம் நிறைவடைவதற்கு முன்னர் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு வழங்குவதே எமது எதிர்பார்ப்பாகும் - என்றார். (அ)

## ஜகத் புஷ்பகுமாரவுக்கு பிணை!

கொழும்பு, ஜூலை. 09

முன்னாள் அமைச்சர் ஜகத் புஷ்பகுமார, ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக கைது செய்யப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்ட அவர், நேற்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது, தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் அவரை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. முன்னதாக, மூன்று பிரதான ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் நேற்று முற்பகல் ஜகத் புஷ்பகுமாரவை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ... லிமிடெட் நிறுவனத்தினரால் 09.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org